# “ வினை தீர்க்கும் வேல் ”

கடவுளை பல நாமங்களில் வழிபடுகிறோம். எனக்கு ப்ரீத்தியான கடவுள் வேல்முருகன். எனக்கு ஏதோ ஒரு இடையூறு நேரும் தருணத்தில் வேல் என் மனக்கண் முன்னே தோன்றும். அப்படி என்றால் வேல் மிகவும் சக்தியை அளிக்கும் ஆயுதம் என தோன்றியது. வேலின் அமைப்பில் முக்கியமான பகுதி முக்கோணம். இது முருகன்.

இம்முக்கோணத்தினுள்ளே மூன்று விபூதி பட்டைகளுண்டு. இவை முருகப்பெருமானின் தந்தை சிவ பெருமானை குறிக்கும். நடு பட்டையின் மையத்தில் குங்குமப்பொட்டு, முருகப்பெருமானின் தாய் சக்தியை குறிக்கும். சூர சம்ஹாரம் செய்ய தாய் சக்தியடமிருந்து முருகன் வேலை பெற்றார்.

நான்கு பேர் சேர்ந்தது. ஒரு குடும்பம். இதில் ஒருவர் நான் சொன்ன வேலில் இல்லை, இவர் யார்..? இவர்தான் மூலதார மூர்த்தி. வேல் பிடிப்பதற்கு ஒரு கைப்பிடி வேண்டும். அதை நம் கையில் பிடித்தால், மேல் முனையில் இம் மூன்றும் இருக்கும். இப்போது தெரிகிறதா..? அந்த பிடி தான் மூலாதார மூர்த்தி ஸ்ரீ விநாயகர் இந்த பிடியில் இருக்கிறார். மற்ற மூவரையும் தாங்குகிறார். வேலை நினைத்து அல்லது முருகப்பெருமானை வணங்கினால் வேல் நம்மை பாதுகாக்கும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். சிவனுடைய குடும்பமே வேலில் அடங்கியிருக்கிறது. இப்பொழுது கந்த சஷ்டி கவசத்தை நாம் மனமுறுகி பாடும் பொழுது அந்த வேல் நம் ஒவ்வொரு பாகத்தையும் பாதுகாத்து நம்மை ஆரோக்கியமாக வைக்க உதவுகிறது. ஆகையால் முருகப்பெருமானை வணங்குவோம். அதனால் சர்வேஸ்வரனே நம்மை காப்பாற்றுவார். வேலுண்டு பயமில்லை முருகா.




Vel is associated with **Lord Muruga**. But vel alone can protect a devoter of Lord Muruga. I was intrigued. I think I got the answer  Vel's base triangle represents Lord Himself. His father is **Lord Shiva** which is included in Vel as three lines. His mother, **Goddess Shakthi** blessed Muruga with Vel to destroy evil force-- Sura samharam. Shakthi Is represented as red kungumam in the midline. In this family,one great personality is missing. Mooladhara murthy- **Lord Vigneshwara**. Entire vel representing Shiva Shakthi and Muruga anchored by the stem/ handle . He supports the entire family.

What made me arrive at this idea? My favourite God is **LORD MURUGA**. Whenever I encounter hurdles Vel protects me. Hence I realized that “ **Vel** ” represents entire Shiva's family . You cannot think of Murugan without Vel. So if we pray to Lord Muruga the entire family protects you.

**Dr. P. S. Lalitha,**
Founder, Reiki Centre of India.
Reiki Grand Master, Chennai.
9840044198